00529

இலங்கை திறந்த பல்கலைக்கழகம்

கல்விப்பீடம்

கல்விமாணி (சிறப்பு) ஆரம்பக்கல்வி நிகழ்ச்சித்திட்டம் - 2023/2024

இறுதிப்பரீட்சை

மட்டம் - 04

EPU4232–இல்லம் - பாடசாலை – சமுதாயத் தொடர்பு

காலம்: இரண்டு (02) மணித்தியாலங்கள்

திகதி:- 15.06.2025 நேரம்:பி.ப 01.30 - பி.ப 03.30

**பகுதி I இல் அனைத்து வினாக்களுக்கும் பகுதி II இல் ஏதேனும் மூன்று (03) வினாக்களுக்கும் விடையளிக்குக.**

## பகுதி – I

1. இல்லம் - பாடசாலை தொடர்பின் முக்கியத்துவத்தினை **மூன்று** (03) உதாரணங்கள் வழங்கி விளக்குக.
2. "இல்லம் மற்றும் பாடசாலை தொடர்பு என்பது இலங்கையின் பாடசாலை மட்ட நோக்கங்களை அடைவதில் முக்கியமானது"

   மேற்கூறிய கூற்றினை ஏற்றுக்கொள்கிறீர்களா? உமது விடைக்கு துணைபுரியக்கூடிய **மூன்று (03)** காரணங்களை வழங்குக.
3. பாடசாலையொன்று சமுதாயத்துடன் தொடர்பினை பேணுவதிலிருந்து பெற்றுக் கொள்ளக்கூடிய நன்மைகள் **ஐந்தினைப் (05)** பட்டியலிடுக.
4. இல்லம் மற்றும் சமுதாய தொடர்பினை பாடசாலை அதிபர் எவ்வாறு வினைத்திறனாக பயன்படுத்த முடியும் என்பதனைச் சுருக்கமாக விளக்குக.
5. "இல்லம், பாடசாலை மற்றும் சமூதாயத் தொடர்பு" எனும் பதத்தினைச் சுருக்கமாக விளக்குக.
6. பெற்றோருடன் ஒரு வழி தொடர்பாடலை எவ்வாறு நிர்வகிக்கிறீர்கள்? சுருக்கமான விளக்கத்தினை வழங்குக.
7. முன்பள்ளி காலப்பகுதியில் பிள்ளையின் உடல் திறன்களை எவ்வாறு மேம்படுத்த முடியும் என்பதை **மூன்று (03)** உதாரணங்களுடன் விளக்குக.
8. தொடர்புகளை ஏற்படுத்துபவர் என்ற வகையில், முன்பள்ளி ஆசிரியரின் பொறுப்புக்கள் **ஐந்தினைப் (05)** பட்டியலிடுக.

(05 x 08 = 40 புள்ளிகள்)

## பகுதி – II

9. i. பாடசாலைகளின் தரத்தினை (Quality) மேம்படுத்துவதற்கு பெற்றோர்கள் எவ்வாறான பாடசாலை செயற்பாடுகளில் ஈடுபடலாம் என்பதனை **மூன்று (03)** உதாரணங்களுடன் விளக்குக.

   (10 புள்ளிகள்)

   ii. இலங்கையின் பாடசாலை மட்ட பெற்றோர் விழிப்புணர்வுத் திட்டத்தின் முக்கியத்துவத்தினை விமர்சன ரீதியாக பகுப்பாய்வு செய்க.

   (10 புள்ளிகள்)

10. i. "ஆரம்ப பாடசாலை ஆசிரியர், பிள்ளைகளின் தனிப்பட்ட தேவைகளை அடிப்படையாகக் கொண்டு செயற்பாடுகளைத் திட்டமிடல் மற்றும் செயற்படுத்தல் வேண்டும்."

மேற்கூறிய கூற்றினை ஏற்றுக்கொள்கிறீர்களா? உமது பதிலை **ஐந்து** (05) காரணங்களுடன் நியாயப்படுத்துக.

**(10 புள்ளிகள்)**

ii. மேலே விபரித்தபடி, செயற்பாடுகளை திட்டமிடல் மற்றும் செயற்படுத்தும் போது எவ்வாறான சவால்களுக்கு முகங்கொடுக்க வேண்டும்? பொருத்தமான உதாரணங்களுடன் **ஐந்து (05)** சவால்களைக் கலந்துரையாடுக.

**(10 புள்ளிகள்)**

11. i. "ஆரம்ப பாடசாலை ஆசிரியர் என்ற வகையில், கல்வியின் தரத்தினை மேம்பாடு செய்ய பாடசாலை மற்றும் சமுதாயத் தொடர்பினை நேர்மாறான முறையில் விருத்தியடைய செய்தல் அத்தியவசியமாகிறது"

மேற்கூறிய கூற்றினை ஏற்றுக்கொள்கிறீர்களா? உமது விடைக்கான காரணத்தினை **ஐந்து (05)** உதாரணங்களுடன் தருக.

**(10 புள்ளிகள்)**

ii. பாடசாலை அபிவிருத்தி செயற்பாடுகளில் பெற்றோரின் எதிர்மறையான மனப்பான்மையினை குறைப்பதற்காக நடைமுறைப்படுத்தக்கூடிய உத்திகள் யாவை? **ஐந்து (05)** உத்திகளை விபரிக்குக.

**(10 புள்ளிகள்)**

12. i. பாடசாலை மற்றும் சமுதாயம் என்பனவற்றுக்கிடையில் நேர்மாறான தொடர்பினை விருத்தி அடைய செய்ய கல்வி அமைச்சினால் புதிய உத்திகளை அறிமுகம் செய்யும் போதுள்ள பொறுப்புக்கள் **ஐந்தினை (05)** பட்டியலிடுக. அவற்றின் **இரண்டு (02)** பொறுப்புக்களை உதாரணங்களுடன் விபரிக்குக.

**(10 புள்ளிகள்)**

ii. இலங்கையின் பொதுக்கல்வி முறையில் பாடசாலை - இல்லம் - சமூதாய தொடர்பினை மேம்படுத்த தற்போதைய அரசாங்கம் நடைமுறை நிகழ்ச்சித்திட்டங்களை அறிமுகப்படுத்துகிறது என நம்புகிறீர்களா? உமது சொந்த அனுபவங்களைக் கொண்டு, **ஐந்து (05)** காரணிகளை விமர்சன ரீதியாக கலந்துரையாடுக.

**(10 புள்ளிகள்)**

13. இவ்வினாவில் பகுதி **(அ)** அல்லது **(ஆ)** இற்கு மாத்திரம் விடை தருக.

அ. i. "பாடசாலை மட்ட பெற்றோர் விழிப்புணர்வு நிகழ்ச்சித்திட்டம்" எனும் பதத்தினால் கருதப்படுவது யாது?

**(10 புள்ளிகள்)**

ii. "முன்பள்ளியொன்றில், ஆசிரியர் மாற்றமொன்றிற்கான முகவர் ஆவார்" இக்கூற்றினை ஏற்றுக்கொள்கிறீர்களா? உமது விடையினை நியாயப்படுத்துக.

**(10 புள்ளிகள்)**

ஆ. i. "இளம் பிள்ளைகளின் சமூக – மனவெழுச்சி விருத்தி" எனும் பதத்தினால் கருதப்படுவது யாது?

**(10 புள்ளிகள்)**

ii. "ஆரம்ப பாடசாலை அமைப்பில் சமூதாய ஈடுபாட்டு செயற்பாடுகள் மிகவும் முக்கியமானது" இக்கூற்றினை ஏற்றுக்கொள்கிறீர்களா? உமது விடையினை நியாயப்படுத்துக.

**(10 புள்ளிகள்)**

**- முழுப்பதிப்புரிமையுடையது -**



105